பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 01 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் மூலம், **125** நாள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**2.** பிஜேபி தேசியத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நடைபெறுகிறது.

**3.** தமிழகத்தில் பெண் காவலர்களுக்கே பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**4.** சென்னை மாநகரில் **15** நாட்களுக்கு ஊர்வலங்கள் மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

**5.** விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட் போட்டியில் சௌராஷ்டிரா அணியை **38** ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி விதர்பா அணி பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் மூலம், 125 நாள் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில், இந்த சட்டத்தின் மூலம் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 125 நாள் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின்கீழ் 15 நாட்களுக்குள் வேலைவாய்ப்பு வழங்கப்படாவிட்டால் வேலைவாய்ப்பு கிடைக்காதோருக்கான உதவித்தொகை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் புதிய சட்டத்தின்கீழ் 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்குவதற்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிஜேபி தேசியத் தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து, அக்கட்சியின் தேர்தல் அதிகாரி திரு. K. Laxman வெளியிட்டுள்ள அட்டவணையின்படி, தலைவர் தேர்தலில் போட்டியிட விரும்புவோர், இன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை, மனுதாக்கல் செய்யலாம்.

இந்த மனுக்களின் மீதான பரிசீலனை, பிற்பகல் 4 மணி முதல் 5 மணி வரை மேற்கொள்ளப்படுவதுடன், மனுக்களைத் திரும்பப் பெற, மாலை 6 மணி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

போட்டியிருப்பின், நாளை தேர்தல் நடத்தப்பட்டு, புதிய தலைவர் யார் என்பதும், நாளையே அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி அருகே குண்டாற்றின் குறுக்கே சுமார் 23 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், 170 மீட்டர் நீளம், 2 மீட்டர் உயரத்தில் கட்டப்படும் இந்த அணைக்கட்டு மூலம் காரியாப்பட்டியை சுற்றியுள்ள 6 கிராமங்களைச் சேர்ந்த 284 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறும் என்றார்.

இதேபோன்று காரியாப்பட்டியை அடுத்த சென்னம்பட்டி இடது பிரதான கால்வாயை சுமார் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளையும் திரு. தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் பெண் காவலர்களுக்கே பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு முதலமைச்சரின் பாதுகாப்பு பணிக்காக சென்ற பெண் காவலர்களை, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஒருவர் செல்ஃபோன் மூலம் படம் பிடித்ததாக வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றது முதற்கொண்டே பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருப்பதாக தெரிவித்துள்ள திரு. நயினார் நாகேந்திரன், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்ற முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சென்னை மாநகரில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் விதமாக மாநகர காவல் சட்டம் 41வது பிரிவின்கீழ் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகர காவல் ஆணையர் திரு. அருண் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த தடை உத்தரவு நேற்று பிற்பகல் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 2ஆம் தேதி வரை 15 நாட்களுக்கு இந்த தடை உத்தரவு அமலில் இருக்கும் என்றும், உரிய முன் அனுமதி இன்றி பொது இடங்களில் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேனி அருகே கர்நாடக ஐயப்ப பக்தர்கள் தாக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது என்று தென்மண்டல காவல்துறை ஐ.ஜி. திரு. விஜயேந்திர பிதாரி தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தொடர்பாக சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல் மிகைப்படுத்தப்பட்டது என்று கூறியுள்ளார்.

தேனி அல்லிநகரம் அருகே கர்நாடக ஐயப்ப பக்தர்கள் பயணம் செய்யும் வாகனங்கள் மீது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக யாரும் புகார் செய்யாத நிலையில் காவல்துறை தாமாக முன்வந்து நடவடிக்கை மேற்கொண்டு தேனியை சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்த முழுமையான விவரம் கர்நாடக காவல்துறைக்கும் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கூறிய திரு. விஜயேந்திர பிதாரி, தனிப்பட்ட விபத்தை மாநில அல்லது மொழிப் பிரச்சினையாக மாற்ற முயற்சிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

சேலம் மாநகரில் உள்ள குமரகிரி ஏரிப் பூங்கா 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது.

அந்த ஏரியில் படகு சவாரி மற்றும் நடைப்பயிற்சிக்கான வசதிகள் செய்யப்பட்டள்ளதால் புதிய சுற்றுலாத்தலமாக உருவெடுத்துள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Vijayakumar - 52 Sec)

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் கூடலூரில் வனவிலங்குகள் நடமாட்டதைதைக் கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் யானைகள் நடமாட்டம் குறித்து அப்பகுதி மக்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படுவதால் அசம்பாவிதங்கள் தடுக்கப்பட்டிருப்பதாக கிராமவாசி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

(Voice Byte - Ramesh, Kozhipalam - 38 Sec)

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

சிரியாவில் குர்திஷ் கிளர்ச்சியாளர்களுடன் நாடு தழுவிய சண்டைநிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

---------------

ஈரானில் நடைபெற்று வரும் போராட்டம் காரணமாக இதுவரை பாதுகாப்பு படை வீரர்கள் 500 பேர் உட்பட 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

---------------

மும்பை மாநகரில் குடிநீர் வினியோக குழாய் பராமரிப்பு பணி காரணமாக தாதர், அந்தேரி, குர்லா உள்ளிட்ட பகுதிகளில் நாளை முதல் 3 நாட்களுக்கு குடிநீர் வினியோகம் தடைபடும் என்று மாநகராட்சி அறிவித்துள்ளது.

---------------

சத்தீஸ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையில் 4 பெண்கள் உட்பட 6 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

---------------

திருவள்ளூர் அருகே கூவம் ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட சாமி சிலைகள் எப்படி வந்தது என்பது குறித்து காவல்துறையினர் மற்றும் வருவாய் துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

---------------

திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவில் லட்சதீப திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

---------------

பொங்கல் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி சேலம் ரயில் நிலையத்தில் முறைகேடாக ரயில் டிக்கெட் விற்பனையில் ஈடுபட்ட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

---------------

காஞ்சிபுரம் வரதராஜபெருமாள் கோவிலில் தை அமாவாசையை முன்னிட்டு நடைபெற்ற பெருமாள் புறப்பாடு நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

---------------

சென்னை மெரினா கடற்கரையை தூய்மையாக பராமரிப்பதற்கான “என் சென்னை என் பெருமை - என் மெரினா என் பொறுப்பு” என்ற விழிப்புணர்வு இயக்கத்தை மாநகராட்சி ஆணையர் திரு. குமரகுருபரன் நேற்று தொடங்கி வைத்தார்.

---------------

சென்னை சங்கமம் திருவிழாவின் ஒரு பகுதியாக சென்னை ஜாஃபர்கான் பேட்டை ராகவன் காலனியில் அசாம் மாநில கலைஞர்களின் பிஹு நடனத்தை ஏராளமானோர் கண்டு மகிழ்ந்தனர்.

---------------

சென்னை மெரினா, பெசன்ட் நகர் உள்ளிட்ட கடற்கரைகளில் விதிமுறைகளை மீறி குப்பை கொட்டிய 241 பேரிடம் ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

---------------

***விளையாட்டுச் செய்திகள்***

விஜய் ஹசாரே கோப்பை கிரிக்கெட் போட்டியில் சௌராஷ்டிரா அணியை 38 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி விதர்பா அணி பட்டம் வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய விதர்பா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 317 ரன் எடுத்தது.

பின்னர் 318 ரன் வெற்றி இலக்குடன் களமிறங்கிய சௌராஷ்டிரா அணி, 48 புள்ளி 5 ஓவரிலேயே 279 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-------------

இந்தூரில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து 41 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 2-1 என்ற ஆட்டக் கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

**<<<<The End>>>>**